## சங்கீதம் 111

1. அல்லேலூயா,
செம்மையானவர்களுடைய
சங்கத்திலும்,
சபையிலும் **கர்த்தரை**
முழு இருதயத்தோடும்
துதிப்பேன்.



2. **கர்த்தரின்** செய்கைகள்
பெரியவைகளும்,
அவைகளில் பிரியப்படுகிற
எல்லாராலும்
ஆராயப்படுகிறவைகளு
மாயிருக்கிறது.

3. அவருடைய செயல் மகிமையும்
மகத்துவமுமுள்ளது,
அவருடைய நீதி
என்றென்றைக்கும் நிற்கும்.

4. அவர் தம்முடைய
அதிசயமான செய்கைகளை
நினைவுகூரும்படி செய்தார்,
**கர்த்தர்** இரக்கமும்
மனஉருக்கமுமுள்ளவர்.

5. தமக்குப் பயந்தவர்களுக்கு
ஆகாரம் கொடுத்தார்;
தமது உடன்படிக்கையை
என்றென்றைக்கும்
நினைப்பார்.



6. ஜாதிகளின் சுதந்தரத்தைத்
தமது ஜனங்களுக்குக்
கொடுத்ததினால்,
தமது கிரியைகளின்
பெலத்தை அவர்களுக்குத்
தெரியப்படுத்தினார்.

7. அவருடைய கரத்தின்
கிரியைகள் சத்தியமும்
நியாயமுமானவைகள்;
அவருடைய
கட்டளைகளெல்லாம்
உண்மையானவைகள்.



8. அவைகள்
என்றென்றைக்குமுள்ள
சதாகாலங்களுக்கும்
உறுதியானவைகள்,
அவைகள் உண்மையும்
செம்மையுமாய்ச்
செய்யப்பட்டவைகள்.

9. அவர் தமது ஜனத்திற்கு
மீட்பை அனுப்பி ,
தமது உடன்படிக்கையை
நித்திய உடன்படிக்கையாகக்
கட்டளையிட்டார்;
அவருடைய நாமம் பரிசுத்தமும்
பயங்கரமுமானது.

⑥

10. **கர்த்தருக்குப்** பயப்படுதலே
ஞானத்தின் ஆரம்பம்;
அவருடைய கற்பனைகளின் படி
செய்கிற யாவருக்கும்
நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி
என்றைக்கும் நிற்கும்.

**முக்கிய அதிகாரங்கள்**

23 கர்த்தர் என்
மேய்ப்பராயிருக்கிறார்.
51 பாவ அறிக்கையின் ஜெபம்
100 துதியின் சங்கீதம்.
119 வேதவசனமாகிய தேவனுடைய
வார்த்தையின் மகிமை.
145 மகிமையின் தேவனை
துதித்துப் போற்றுங்கள்.

Phone : 8903011350

1. அல்லேலூயா, **கர்த்தருக்குப்** பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

2. அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.



3. ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.

4.செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்; அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன்.

5. இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.



6. அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.



7. துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் **கர்த்தரை** நம்பித் திடனாயிருக்கும்

8. அவன் இருதயம் உறுதியாயிருக்கும்; அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்.



9. வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்.

10. துன்மார்க்கன் அதைக் கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்; துன்மார்க்கருடைய ஆசை அழியும்.

சங்கீதப் புத்தகம் ஒரு பக்தி நூலாகும். தேவனை நேசிக்கும் ஒரு பக்தன் தனக்கும் அவருக்குமுள்ள நெருக்கமான உறவை பல விதங்களில் வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்துவதை, விவரிப்பதை இப்புத்தகத்தில் பார்க்கலாம். நமது பக்தி உணர்வை, பரவசத்தைத் தூண்ட, தெளிவுபடுத்த சங்கீதப் புத்தகம் பெருமளவில் உதவுகிறது.

## சங்கீதம் 113

1. அல்லேலூயா, **கர்த்தருடைய** ஊழியக்காரரே, துதியுங்கள்; **கர்த்தருடைய** நாமத்தைத் துதியுங்கள்.



2. இது முதல் என்றென்றைக்கும் **கர்த்தருடைய** நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.

3. சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் **கர்த்தருடைய** நாமம் துதிக்கப்படுவதாக.



4. **கர்த்தர்** எல்லா ஜாதிகள்மேலும் உயர்ந்தவர்; அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது.



5. உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய **கர்த்தருக்குச்** சமானமானவர் யார்?

6. அவர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார்.

7. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

8. அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்.

9. மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். அல்லேலூயா.



## சங்கீதம் 114

1. இஸ்ரவேல் எகிப்திலும், யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரான ஜனத்திலுமிருந்து புறப்பட்ட போது,

2. யூதா அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும், இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று.

3. கடல் கண்டு விலகி ஓடிற்று; யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது.



4. மலைகள் ஆட்டுக்கடாக்களைப் போலவும், குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளினது.

5. கடலே, நீ விலகியோடுகிறதற்கும்; யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புகிறதற்கும்;

6. மலைகளே, நீங்கள் ஆட்டுக் கடாக்களைப்போலவும்; குன்றுகளே, நீங்கள் ஆட்டுக் குட்டிகளைப் போலவும் துள்ளுகிறதற்கும், உங்களுக்கு என்ன வந்தது?



7. பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு.

8. அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.



1. எங்களுக்கு அல்ல, **கர்த்தாவே,** எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்.

2. அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?

3. நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.

4. அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

5. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

6. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது.

7. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது.

8. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்.

9. இஸ்ரவேலே, **கர்த்தரை** நம்பு; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.



10. ஆரோன் குடும்பத்தாரே, **கர்த்தரை** நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

11. **கர்த்தருக்குப்** பயப்படுகிறவர்களே, **கர்த்தரை** நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

12. **கர்த்தர்** நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்; அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.



13. **கர்த்தருக்குப்** பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார்.

14. **கர்த்தர்** உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்.

15. வானத்தையும் பூமியையும் படைத்த **கர்த்தராலே** நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

16. வானங்கள் **கர்த்தருடையவைகள்;** பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.

17. மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் **கர்த்தரைத்** துதியார்கள்.

18. நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் **கர்த்தரை** ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா.



1. **கர்த்தர்** என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன்.



2. அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன்.

3. மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்.

4. அப்பொழுது நான் **கர்த்தருடைய** நாமத்தைத் தொழுதுகொண்டு: **கர்த்தாவே,** என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்.



5. **கர்த்தர்** கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்.

6. **கர்த்தர்** கபடற்றவர்களைக் காக்கிறார்; நான் மெலிந்து போனேன், அவர் என்னை இரட்சித்தார்.

7. என் ஆத்துமாவே, **கர்த்தர்** உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.

8. என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.

9. நான் **கர்த்தருக்கு** முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.

10. விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; நான் மிகுதியும் வருத்தப்பட்டேன்.

11. எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.

12. **கர்த்தர்** எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

13. இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, **கர்த்தருடைய** நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

14. நான் **கர்த்தருக்குச்** செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.

15. **கர்த்தருடைய** பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.



16. **கர்த்தாவே,** நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்து விட்டீர்.



17. நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, **கர்த்தருடைய** நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.




18. நான் **கர்த்தருக்குச்** செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்,

19. **கர்த்தருடைய** ஆலயத்தின் பிராகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

## சங்கீதம் 117

### பைபிளில் மிகச் சிறிய அதிகாரம்

1. ஜாதிகளே, எல்லாரும் **கர்த்தரைத்** துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.



2. அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; **கர்த்தரின்** உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா.

## சங்கீதம் 118

### பைபிளில் மைய அதிகாரம்

1. **கர்த்தரைத்** துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.



2. அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக.

3. அவர் கிருபை என்றுமுள்ளதென்று, ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக.

4. அவர் கிருபை என்றுமுள்ளதென்று, **கர்த்தருக்குப்** பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக.

5. நெருக்கத்திலிருந்து **கர்த்தரை** நோக்கிக் கூப்பிட்டேன், **கர்த்தர்** என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்.

6. **கர்த்தர்** என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

7. எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் **கர்த்தர்** என் பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்.




8. **மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.**

9. பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், **கர்த்தர்** பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

10. எல்லா ஜாதியாரும் என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்; **கர்த்தருடைய** நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

11. என்னைச் சுற்றிலும் வளைந்து கொள்ளுகிறார்கள்; **கர்த்தருடைய** நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.



12. தேனீக்களைப் போல என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்; முள்ளில் பற்றின நெருப்பைப்போல அணைந்து போவார்கள்; **கர்த்தருடைய** நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

13. நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; **கர்த்தரோ** எனக்கு உதவி செய்தார்.

14. **கர்த்தர்** என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார்.

15. நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு; **கர்த்தரின்** வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

16. **கர்த்தரின்** வலதுகரம் உயர்ந்திருக்கிறது; **கர்த்தரின்** வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

17. நான் சாவாமல், பிழைத்திருந்து, **கர்த்தருடைய** செய்கைகளை விவரிப்பேன்.



18. **கர்த்தர்** என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

19. நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் **கர்த்தரைத்** துதிப்பேன்.



20. **கர்த்தரின்** வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.

21. நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் துதிப்பேன்.



22. வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று.



23. அது **கர்த்தராலே** ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

24. இது **கர்த்தர்** உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

25. **கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்.**



**ஓசன்னா**

26. **கர்த்தருடைய** நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; **கர்த்தருடைய** ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

27. **கர்த்தர்** நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்; பண்டிகைப் பலியைக் கொண்டுபோய்ப் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள்.

28. நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன்.



29. **கர்த்தரைத்** துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.

**சங்கீதம் 119 முழுவதும் ⑤ தனித் தொகுப்பாய்க் கிடைக்கும்.**

## சங்கீதம் 120
### (ஆரோகண சங்கீதம்)

1. என் நெருக்கத்திலே **கர்த்தரை** நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார்.



2. **கர்த்தாவே,** பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும்.

3. கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்?

4. பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.

5. ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்!

6. சமாதானத்தைப் பகைக்கிறவர்களிடத்தில் என் ஆத்துமா குடியிருந்ததும் போதும்!



7. நான் சமாதானத்தை நாடுகிறேன்; அவர்களோ, நான் பேசும்போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள்.



## சங்கீதம் 121
### (ஆரோகண சங்கீதம்)

1. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2. வானத்தையும், பூமியையும் உண்டாக்கின **கர்த்தரிடத்திலிருந்து** எனக்கு ஒத்தாசை வரும்.



3. உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.



4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

5. **கர்த்தர்** உன்னைக் காக்கிறவர்; **கர்த்தர்** உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

6. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7. **கர்த்தர்** உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8. **கர்த்தர்** உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.



எருசலேம் புனித ஸ்தலத்திற்கு யூதப்பண்டிகை காலங்களில் பாத யாத்திரை செய்த யாத்ரீகர்கள் மலைப் படிக்கட்டுகளில் ஏறிச் செல்லும்போது பாடும் பக்திப் பாடல்கள் **'ஆரோகண சங்கீதங்கள்'** என்று அழைக்கப்பட்டன.



## சங்கீதம் 122

**(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்)**

1. **கர்த்தருடைய** ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்.



2. எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று.
3. எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது.
4. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் **கர்த்தருடைய** ஜனங்களாகிய கோத்திரங்கள் **கர்த்தரின்** நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்.
5. அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது.



6. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.
7. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.



8. என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும், உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன்.
9. எங்கள் தேவனாகிய **கர்த்தரின்** ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்.

## சங்கீதம் 123

**(ஆரோகண சங்கீதம்)**

1. பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.



2. இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய **கர்த்தர்** எங்களுக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.



3. எங்களுக்கு இரங்கும் **கர்த்தாவே,** எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம்.
4. சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும், எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது.



**முக்கிய வார்த்தைகள்**

**துதியுங்கள்,** 'அல்லேலூயா'

அல்லேலூயா என்ற வார்த்தையின் பொருள் 'தேவனைத் துதி' என்பதாகும்.



## சங்கீதம் 124
### (தாவீது பாடின ஆரோகண சங்கீதம்)

1. மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, **கர்த்தர்** நமது பக்கத்திலிராவிட்டால்,

2. **கர்த்தர்** தாமே நமது பக்கத்திலிராவிட்டால்,

3. அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.

4. அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின் மேல் பெருகி,

5. கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.



6. நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற **கர்த்தருக்கு** ஸ்தோத்திரம்.

7. வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

8. நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின **கர்த்தருடைய** நாமத்தில் உள்ளது.



## சங்கீதம் 125
### (ஆரோகண சங்கீதம்)

1. **கர்த்தரை** நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்.



2. பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், **கர்த்தர்** இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்.

3. நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.

4. **கர்த்தாவே,** நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்யும்.

5. தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் **கர்த்தர்** அக்கிரமக்காரரோடே போகப்பண்ணுவார். இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு.



## சங்கீதம் 126
### (ஆரோகண சங்கீதம்)

1. சீயோனின் சிறையிருப்பைக் **கர்த்தர்** திருப்பும்போது, சொப்பனம் காண்கிறவர்கள் போல் இருந்தோம்



2. அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது; அப்பொழுது: **கர்த்தர்** இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.
3. **கர்த்தர்** நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.
4. **கர்த்தாவே,** தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவது போல, எங்கள் சிறையிருப்பைத் திருப்பும்.
5. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.
6. அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.



## சங்கீதம் 127
### (சாலொமோன் பாடின ஆரோகண சங்கீதம்)



1. **கர்த்தர்** வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;
2. **கர்த்தர்** நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.



3. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா: அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.



4. இதோ, பிள்ளைகள் **கர்த்தரால்** வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.



5. வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.
6. அவைகளால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்.

***சங்கீதங்கள் 127 & 128 கிறிஸ்தவ திருமண ஆராதனையில் வாசிக்கப்படும் அல்லது பாடப்படும்.***





## சங்கீதம் 128
### (ஆரோகண சங்கீதம்)

1. **கர்த்தருக்குப்** பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

2. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.



3. உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள்.



4. இதோ, **கர்த்தருக்குப்** பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

5. **கர்த்தர்** சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

6. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

**குடும்ப வாழ்க்கையின் ஆசீர்வாதங்களுக்காக 127&128 சங்கீதங்களை வாசித்து ஜெபிக்கலாம்.**



## சங்கீதம் 129
### (ஆரோகண சங்கீதம்)

1. என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள்.

2. என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும், என்னை மேற்கொள்ளாமற் போனார்கள்.



3. உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச் சால்களை நீளமாக்கினார்கள்.

4. **கர்த்தரோ** நீதியுள்ளவர்; துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார் என்று, இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

5. சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்.

6. வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்.



7. அறுக்கிறவன் அதினால் தன் கையையும், அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும் நிரப்புவதில்லை.



8. **கர்த்தருடைய** ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக; **கர்த்தரின்** நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம் என்று வழிப்போக்கர் சொல்வதுமில்லை.

## சங்கீதம் 130

### (ஆரோகண சங்கீதம்)

1. **கர்த்தாவே,** ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

பாவ அறிக்கை

2. ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்; என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக.



3. **கர்த்தாவே,** நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே.

4. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு.

5. **கர்த்தருக்குக்** காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்.



6. எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும், அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

7. இஸ்ரவேல் **கர்த்தரை** நம்பியிருப்பதாக; **கர்த்தரிடத்தில்** கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.

8. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார்.

## சங்கீதம் 131

### (தாவீது பாடின ஆரோகண சங்கீதம்)

1. **கர்த்தாவே,** என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல,என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை.



2. தாயின் பால் மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணினேன்; என் ஆத்துமா பால் மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது.

3. இதுமுதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் **கர்த்தரை** நம்பியிருப்பதாக.

### சேலா:

இசையமைப்பில் பயன்படுத்தப் படும் இந்த வார்த்தையின் பொருள் இடைவேளை, அமைதி என்பதாகும். ஒரு பாடலைப் பாடும்போது ஒரு குறிப்பிட்ட வரியைப் பாடினபின் அதன் கருத்தை சற்று கவனமாக யோசித்துப் பார்க்க எடுத்துக்கொள்ளும் இடைவேளை **‘சேலா’** என்று அழைக்கப்படுகிறது. சங்கீதப் புத்தகத்தில் இந்த வார்த்தை 71 தடவை வருகிறது.

(ஆரோகண சங்கீதம்)

1. **கர்த்தாவே,** தாவீதையும்
அவனுடைய சகல
உபத்திரவத்தையும்
நினைத்தருளும்.



2. அவன்: நான் **கர்த்தருக்கு**
ஒரு இடத்தையும்,
யாக்கோபின் வல்லவருக்கு
ஒரு வாசஸ்தலத்தையும்
காணுமட்டும்,

3. என் வீடாகிய கூடாரத்தில்
பிரவேசிப்பதுமில்லை,
என் படுக்கையாகிய
கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை;

4. என் கண்களுக்கு
நித்திரையையும்,
என் இமைகளுக்கு
உறக்கத்தையும்
வரவிடுவதுமில்லை
என்று,



5. **கர்த்தருக்கு** ஆணையிட்டு,
யாக்கோபின் வல்லவருக்குப்
பொருத்தனை பண்ணினான்.

6. இதோ, நாம் எப்பிராத்தாவிலே
அதின் செய்தியைக் கேட்டு,
வனத்தின் வெளிகளில்
அதைக் கண்டோம்.

7. அவருடைய
வாசஸ்தலங்களுக்குள்
பிரவேசித்து,
அவர் பாதபடியில் பணிவோம்.

8. **கர்த்தாவே,** உமது வல்லமை
விளங்கும் பெட்டியுடன்
நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள்
எழுந்தருளும்.



9. உம்முடைய ஆசாரியர்கள்
நீதியைத் தரித்து,
உம்முடைய பரிசுத்தவான்கள்
கெம்பீரிப்பார்களாக.

10. நீர் அபிஷேகம்
பண்ணுவித்தவனின்
முகத்தை உமது தாசனாகிய
தாவீதினிமித்தம்
புறக்கணியாதிரும்.



11. உன் கர்ப்பத்தின் கனியை
உன் சிங்காசனத்தின்மேல்
வைப்பேன் என்றும்,

12. உன் குமாரர் என்
உடன்படிக்கையையும்,
நான் போதிக்கும்
என் சாட்சிகளையும் காத்து
நடந்தால், அவர்கள்
குமாரரும் என்றென்றைக்கும்
உன் சிங்காசனத்தில்
வீற்றிருப்பார்கள் என்றும்,
**கர்த்தர்** தாவீதுக்கு
உண்மையாய்
ஆணையிட்டார்;
அவர் தவறமாட்டார்.

13. **கர்த்தர்** சீயோனைத்
தெரிந்துகொண்டு, அது தமக்கு
வாசஸ்தலமாகும்படி
விரும்பினார்.

14. இது என்றென்றைக்கும்
நான் தங்கும் இடம்; இதை
நான் விரும்பினபடியால்,
இங்கே வாசம்பண்ணுவேன்.

15. அதின் ஆகாரத்தை நான்
ஆசீர்வதித்து வருவேன்;
அதின் ஏழைகளை
நான் அப்பத்தினால்
திருப்தியாக்குவேன்.



16. அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்; அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்.



17. அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்; நான் அபிஷேகம் பண்ணுவித்த வனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம் பண்ணினேன்.

18. அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்.

## சங்கீதம் 133

(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்)



1. இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?

2. அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,



3. எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே **கர்த்தர்** என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.

## சங்கீதம் 134

(ஆரோகண சங்கீதம்)

1. இதோ, இராக்காலங்களில் **கர்த்தருடைய** ஆலயத்தில் நிற்கும் **கர்த்தரின்** ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்.

2. உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்.



3. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின **கர்த்தர்** சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.

## சங்கீதம் 135

1. அல்லேலூயா, **கர்த்தருடைய** நாமத்தைத் துதியுங்கள்; **கர்த்தரின்** ஊழியக்காரரே, துதியுங்கள்.

2. **கர்த்தருடைய** வீட்டிலும், நமது தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே, **கர்த்தரைத்** துதியுங்கள்.



3. **கர்த்தர்** நல்லவர்; அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள்; அது இன்பமானது.



4. **கர்த்தர்** யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்.

5. **கர்த்தர்** பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன்.

6. வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், **கர்த்தர்** தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.



7. அவர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

8. அவர் எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும் மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார்.

9. எகிப்துதேசமே, உன் நடுவில் பார்வோன்மேலும் அவனுடைய எல்லா ஊழியக்காரர்மேலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்பினார்.

10. அவர் அநேகம் ஜாதிகளை அடித்து, பலத்த ராஜாக்களைக் கொன்று;

11. எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும், கானானின் சகல ராஜ்யங்களையும் அழித்து,

12. அவர்கள் தேசத்தைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார்.

13. **கர்த்தாவே,** உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது; **கர்த்தாவே,** உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்.

14. **கர்த்தர்** தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்.

15. அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

16. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது. அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

17. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை.

18. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போல் இருக்கிறார்கள்.

19. இஸ்ரவேல் குடும்பத்தாரே, **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்; ஆரோன் குடும்பத்தாரே, **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்.

20. லேவி குடும்பத்தாரே, **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்; **கர்த்தருக்குப்** பயந்தவர்களே, **கர்த்தரை** ஸ்தோத்திரியுங்கள்.

21. எருசலேமில் வாசம்பண்ணுகிற **கர்த்தருக்கு** சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக. அல்லேலூயா.



Phone : 8903011350
Email ID : selwynde @gmail. com

1. **கர்த்தரைத்** துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.
2. தேவாதி தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
3. கர்த்தாதி **கர்த்தரைத்** துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
4. ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
5. வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
6. தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
7. பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
8. பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
9. இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
10. எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.



11. அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப் பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
12. பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
13. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
14. அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்து போகப் பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
15. பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
16. தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
17. பெரிய ராஜாக்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
18. பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
19. எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

20. பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

21. அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

22. அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

23. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

24. நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலை பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

25. மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

26. பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

பரிசுத்த வேதாகமத்திலேயே மிகவும் பெரிய அல்லது நீளமான புத்தகம் சங்கீதப் புத்தகமாகும். வேதாகமத்தின் மிகப்பெரிய நீளமான அதிகாரம்119 (176 வசனங்கள்).மிகச் சிறிய அதிகாரம் 117 (2வசனங்கள்). வேதாகமத்தின் மையமான வசனம் 118:8. இவை எல்லாம் சங்கீதப் புத்தகத்தில் தான் இடம் பெற்றிருக்கின்றன.

## சங்கீதம் 137

1. பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்.

2. அதின் நடுவிலிருக்கும் அலரிச் செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கி வைத்தோம்.

3. எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்.

4. **கர்த்தரின்** பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?

5. எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக.

6. நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

7. **கர்த்தாவே,** எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்; அவர்கள்: அதை இடித்துப் போடுங்கள், அஸ்திபாரமட்டும் இடித்துப் போடுங்கள் என்று சொன்னார்களே.

8. பாபிலோன் குமாரத்தியே,
பாழாய்ப்போகிறவளே,
நீ எங்களுக்குச் செய்தபடி
உனக்குப் பதில் செய்கிறவன்
பாக்கியவான்.

9. உன் குழந்தைகளைப் பிடித்து,
கல்லின்மேல்
மோதியடிக்கிறவன்
பாக்கியவான்.

**சங்கீதம் 138**
**( தாவீதின் சங்கீதம்)**

1. உம்மை என் முழு
இருதயத்தோடும் துதிப்பேன்;
தேவர்களுக்கு முன்பாக
உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

2. உமது பரிசுத்த ஆலயத்திற்கு
நேராக நான் பணிந்து,
உமது கிருபையினிமித்தமும்
உமது உண்மையினிமித்தமும்
உமது நாமத்தைத் துதிப்பேன்;
உமது சகல பிரஸ்தாபத்தைப்
பார்க்கிலும் உமது வார்த்தையை
நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

3. நான் கூப்பிட்ட நாளிலே
எனக்கு மறுஉத்தரவு அருளினீர்;
என் ஆத்துமாவிலே
பெலன்தந்து என்னைத்
தைரியப்படுத்தினீர்.

4. **கர்த்தாவே,** பூமியின்
ராஜாக்களெல்லாரும்
உமது வாயின் வார்த்தைகளைக்
கேட்கும்போது
உம்மைத் துதிப்பார்கள்.

5. **கர்த்தரின்** மகிமை
பெரிதாயிருப்பதினால்,
அவர்கள் **கர்த்தரின்**
வழிகளைப் பாடுவார்கள்.

6. **கர்த்தர்** உயர்ந்தவராயிருந்தும்,
தாழ்மையுள்ளவனை
நோக்கிப் பார்க்கிறார்;
மேட்டிமையானவனையோ
தூரத்திலிருந்து அறிகிறார்.

7. நான் துன்பத்தின் நடுவில்
நடந்தாலும் நீர் என்னை
உயிர்ப்பிப்பீர்;
என் சத்துருக்களின்
கோபத்துக்கு விரோதமாக
உமது கையை நீட்டுவீர்;
உமது வலதுகரம்
என்னை இரட்சிக்கும்.

8. **கர்த்தர்** எனக்காக
யாவையும் செய்து
முடிப்பார்; **கர்த்தாவே,**
உமது கிருபை என்றுமுள்ளது;
உமது கரத்தின் கிரியைகளை
நெகிழவிடாதிருப்பீராக.

**உங்கள் கவனத்திற்கு**

**youtube link :**
**TAT time with selwyn**

**பைபிள் டி.வி**
**திங்கள் - வெள்ளி**
**இரவு 9.00 - 9.30**



**நம்பிக்கை டி.வி செவ்வாய்**
**காலை 7.15 - 7. 30**

**நிஜம் டி.வி திங்கள் - ஞாயிறு**
**இரவு 8.45 - 9.00**

**Play store Nijam TV App download**
**செய்து உங்கள் மொபைலில்**
**பார்க்கலாம்.**

**( இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

*1.* **கர்த்தாவே,** *நீர் என்னை*
*ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.*

*2. என் உட்காருதலையும்*
*என் எழுந்திருக்குதலையும்*
*நீர் அறிந்திருக்கிறீர்;*
*என் நினைவுகளைத்*
*தூரத்திலிருந்து அறிகிறீர்.*

*3. நான் நடந்தாலும்*
*படுத்திருந்தாலும்*
*என்னைச் சூழ்ந்திருக்கிறீர்;*
*என் வழிகளெல்லாம்*
*உமக்குத் தெரியும்.*

*4. என் நாவில் சொல்*
*பிறவாததற்கு முன்னே,*
*இதோ,* **கர்த்தாவே,**
*அதையெல்லாம்*
*நீர் அறிந்திருக்கிறீர்.*

*5. முற்புறத்திலும் பிற்புறத்திலும்*
*நீர் என்னை நெருக்கி,*
*உமது கரத்தை*
*என்மேல் வைக்கிறீர்.*

*6. இந்த அறிவு எனக்கு*
*மிகுந்த ஆச்சரியமும்,*
*எனக்கு எட்டாத*
*உயரமுமாயிருக்கிறது.*

*7. உம்முடைய ஆவிக்கு*
*மறைவாக எங்கே போவேன்?*
*உம்முடைய சமுகத்தை*
*விட்டு எங்கே ஓடுவேன்?*

*8. நான் வானத்திற்கு ஏறினாலும்,*
*நீர் அங்கே இருக்கிறீர்;*
*நான் பாதாளத்தில் படுக்கை*
*போட்டாலும், நீர் அங்கேயும்*
*இருக்கிறீர்.*

*9. நான் விடியற்காலத்துச்*
*செட்டைகளை எடுத்து,*
*சமுத்திரத்தின் கடையாந்தரங்*
*களிலே போய்த் தங்கினாலும்,*

*10. அங்கேயும் உமது கை*
*என்னை நடத்தும்,*
*உமது வலதுகரம்*
*என்னைப் பிடிக்கும்.*

*11. இருள் என்னை*
*மூடிக்கொள்ளுமென்றாலும்,*
*இரவும் என்னைச் சுற்றி*
*வெளிச்சமாயிருக்கும்.*

*12. உமக்கு மறைவாக இருளும்*
*அந்தகாரப்படுத்தாது;*
*இரவும் பகலைப் போல*
*வெளிச்சமாயிருக்கும்;*
*உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.*

*13. நீர் என்*
*உள்ளிந்திரியங்களைக்*
*கைக்கொண்டிருக்கிறீர்;*
*என் தாயின் கர்ப்பத்தில்*
*என்னைக் காப்பாற்றினீர்.*

*14. நான் பிரமிக்கத்தக்க*
*அதிசயமாய் உண்டாக்கப்*
*பட்டபடியால், உம்மைத்*
*துதிப்பேன்; உமது கிரியைகள்*
*அதிசயமானவைகள்,*
*அது என் ஆத்துமாவுக்கு*
*நன்றாய்த் தெரியும்.*

*15. நான் ஒளிப்பிடத்திலே*
*உண்டாக்கப்பட்டு,*
*பூமியின் தாழ்விடங்களிலே*
*விசித்திர விநோதமாய்*
*உருவாக்கப்பட்டபோது,*
*என் எலும்புகள் உமக்கு*
*மறைவாயிருக்கவில்லை.*

16. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

17. தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்.

18. அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும் போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.

19. தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்; இரத்தப்பிரியரே, நீங்கள் என்னை விட்டு அகன்றுபோங்கள்.

20. அவர்கள் உம்மைக் குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிறார்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்.

21. **கர்த்தாவே,** உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ?

22. முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்.

23. **தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.**

24. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

**எழுதியவர்கள்**



150 சங்கீதங்களில் 100 சங்கீதங்களை எழுதியவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தாவீது அரசன் 70 க்கும் அதிகமான சங்கீதங்களையும், ஆசாப் 12, கோராகின் புத்திரர் 11, சாலொமோன் 2, மோசே 1, ஏமான்1, ஈத்தான் 1 சங்கீதங்களையும் எழுதினார்கள். 50 சங்கீதங்கள் யாரால் எழுதப்பட்டன என்று பெயர் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பலராலும் எழுதப்பட்ட சங்கீதங்களின் தொகுப்பு தான் சங்கீதப் புத்தகமாகும் .

**( இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. **கர்த்தாவே,** பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்; கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்.

2. அவர்கள் தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்தித்து, யுத்தஞ்செய்ய நாள்தோறும் கூட்டங்கூடுகிறார்கள்.

3. சர்ப்பத்தைப் போல் தங்கள் நாவைக் கூர்மையாக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளின் கீழ் விரியன் பாம்பின் விஷம் இருக்கிறது.(சேலா)

4. **கர்த்தாவே,** துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்; அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள்.

5. அகங்காரிகள் எனக்குக் கண்ணியையும் கயிறுகளையும் மறைவாய் வைக்கிறார்கள்; வழியோரத்திலே வலையை விரித்து, எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள். ( சேலா)

6. நான் **கர்த்தரை** நோக்கி: நீர் என் தேவன் என்றேன்; **கர்த்தாவே,** என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும்.

7. ஆண்டவராகிய **கர்த்தாவே,** என் இரட்சிப்பின் பெலனே, யுத்தநாளில் என் தலையை மூடினீர்.

8. **கர்த்தாவே,** துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்; அவன் தன்னை உயர்த்தாதபடி அவனுடைய யோசனையை நடந்தேறவொட்டாதேயும். (சேலா)

9. என்னை வளைந்து கொள்ளுகிறவர்களுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையே மூடுவதாக.

10. நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக; அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவார்களாக.

11. பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை; கொடுமையான மனுஷனை பறக்கடிக்கப் பொல்லாப்பு அவனை வேட்டையாடும்.

12. சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் **கர்த்தர்** விசாரிப்பாரென்று அறிவேன்.

13. நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள்; செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்.

( தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,** உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்,
என்னிடத்திற்கு வரத் தீவிரியும்;
நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில்,
என் சத்தத்திற்குச் செவிகொடும்.

2. என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும்,
என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது.

3. **கர்த்தாவே,** என் வாய்க்குக் காவல் வையும்;
என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.

4. அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்;
அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக.

5. நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்;
அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும்;
என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை;
அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்.

6. அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டு போகிறபோது, என் வார்த்தைகள் இன்பமானவைகளென்று கேட்பார்கள்.

7. பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல,
எங்கள் எலும்புகள் பாதாள வாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

8. ஆனாலும் ஆண்டவராகிய **கர்த்தாவே,** என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது;
உம்மை நம்பியிருக்கிறேன்;
என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும்.

9. அவர்கள் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கும்,
அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

10. துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக;
நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன்.

---

- தீர்க்கதரிசன சங்கீதங்கள்
  2,16, 22, 40, 45, 68, 69, 72, 97,110,118.
- அல்லேலூயா சங்கீதங்கள்
  106, 111, 112, 113, 117, 125, 146, 147, 149, 150.
- ஆரோகண சங்கீதங்கள்
  120 - 134

**(தாவீது கெபியிலிருக்கும் போது பண்ணின விண்ணப்பமாகிய மஸ்கீல் என்னும் சங்கீதம்)**

1. **கர்த்தரை** நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; **கர்த்தரை** நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.
2. அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.
3. என் ஆவி என்னில் தியங்கும் போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்; நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணி வைத்தார்கள்.
4. வலதுபுறமாய்க் கண்ணோக்கிப் பாரும், என்னை அறிவார் ஒருவரும் இல்லை; எனக்கு அடைக்கலமில்லாமற் போயிற்று; என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை.
5. **கர்த்தாவே,** உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.
6. என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின்தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்.
7. உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்; எனக்கு நீர் தயவு செய்யும் போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்.

சங்கீதங்களின் இராகமும், அவைகளின் இசை மீட்டப்படும் இசைக் கருவிகளின் பெயர்களும் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்த சூழ்நிலையில் சங்கீதம் இயற்றப்பட்டது என்பதையும் சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் நீங்கள் கவனிக்கலாம்.

இந்தப் புத்தகம் ஒரு பக்தி நூலாகும். தேவனை நேசிக்கும் ஒரு பக்தன் தனக்கும் அவருக்குமுள்ள நெருக்கமான உறவை பல விதங்களில் வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்துவதை, விவரிப்பதை இப்புத்தகத்தில் பார்க்கலாம். நமது பக்தி உணர்வை, பரவசத்தைத் தூண்ட, தெளிவுபடுத்த சங்கீதப் புத்தகம் பெருமளவில் உதவுகிறது.

**c†fç f t d0â0F!**

1. இயேசு கிறிஸ்து
2. மனந்திரும்புங்கள்
3. இயேசுவை நோக்கி
5. இயேசு கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார்?
6. அனுதின ஜெபங்கள் - 7
7. இயேசு தங்கும் வீட்டில்

இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள உதவும் வெவ்வேறு வகையான இலக்கியங்கள் எங்களிடம் உண்டு.

(தாவீதின் சங்கீதம்)

1. **கர்த்தாவே,**
என் ஜெபத்தைக் கேளும்,
என் விண்ணப்பங்களுக்குச்
செவிகொடும்;
உமது உண்மையின்படியும்
உமது நீதியின்படியும் எனக்கு
உத்தரவு அருளிச்செய்யும்.

2. ஜீவனுள்ள ஒருவனும்
உமக்கு முன்பாக நீதிமான்
அல்லாததினாலே,
அடியேனை நியாயந்தீர்க்கப்
பிரவேசியாதேயும்.

3. சத்துரு என் ஆத்துமாவைத்
தொடர்ந்து, என் பிராணனைத்
தரையோடே நசுக்கி,
வெகுகாலத்துக்கு
முன் மரித்தவர்கள்போல்
என்னை இருளில் இருக்கப்
பண்ணுகிறான்.



4. என் ஆவி என்னில்
தியங்குகிறது;
என் இருதயம் எனக்குள்
சோர்ந்து போகிறது.

5. பூர்வ நாட்களை நினைக்கிறேன்,
உமது செய்கைகளையெல்லாம்
தியானிக்கிறேன்;
உமது கரத்தின்
கிரியைகளை
யோசிக்கிறேன்.



6. என் கைகளை
உமக்கு நேராக விரிக்கிறேன்;
வறண்ட நிலத்தைப்போல்
என் ஆத்துமா உம்மேல்
தாகமாயிருக்கிறது. (சேலா.)



7. **கர்த்தாவே,** சீக்கிரமாய்
எனக்குச் செவிகொடும்,
என் ஆவி தொய்ந்து போகிறது;
நான் குழியில்
இறங்குகிறவர்களுக்கு
ஒப்பாகாதபடிக்கு,
உமது முகத்தை
எனக்கு மறையாதேயும்.

8. அதிகாலையில்
உமது கிருபையைக்
கேட்கப்பண்ணும்,



உம்மை நம்பியிருக்கிறேன்,
நான் நடக்கவேண்டிய
வழியை எனக்குக் காண்பியும்;
உம்மிடத்தில் என் ஆத்துமாவை
உயர்த்துகிறேன்.

9. **கர்த்தாவே,**
என் சத்துருக்களுக்கு
என்னைத் தப்புவியும்;
உம்மைப் புகலிடமாகக்
கொள்ளுகிறேன்.

10. உமக்குப் பிரியமானதைச்
செய்ய எனக்குப் போதித்தருளும்,
நீரே என் தேவன்;
உம்முடைய நல்ல ஆவி
என்னைச் செம்மையான
வழியிலே நடத்துவாராக.

11. **கர்த்தாவே,**
உம்முடைய நாமத்தினிமித்தம்
என்னை உயிர்ப்பியும்;
உம்முடைய நீதியின்படி
என் ஆத்துமாவை
இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.

12. உம்முடைய கிருபையின்படி
என் சத்துருக்களை அழித்து,
என் ஆத்துமாவை ஒடுக்குகிற
யாவரையும் சங்காரம்பண்ணும்;
நான் உமது அடியேன்.

(தாவீதின் சங்கீதம்)

1. என் கைகளைப் போருக்கும்
என் விரல்களை யுத்தத்திற்கும்
படிப்பிக்கிற என் கன்மலையாகிய
**கர்த்தருக்கு** ஸ்தோத்திரம்.

2. அவர் என் தயாபரரும்,
என் கோட்டையும்,
என் உயர்ந்த அடைக்கலமும்,
என்னை விடுவிக்கிறவரும்,
என் கேடகமும், நான் நம்பினவரும்,
என் ஜனங்களை எனக்குக்
கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.

3. **கர்த்தாவே,** மனுஷனை
நீர் கவனிக்கிறதற்கும்,
மனுபுத்திரனை
நீர் எண்ணுகிறதற்கும்,
அவன் எம்மாத்திரம்?

4. மனுஷன் மாயைக்கு
ஒப்பாயிருக்கிறான்;
அவன் நாட்கள் கடந்து
போகிற நிழலுக்குச் சமானம்.

5. **கர்த்தாவே,** நீர் உமது
வானங்களைத் தாழ்த்தி இறங்கி,
பர்வதங்கள் புகையும்படி
அவைகளைத் தொடும்.

6. மின்னல்களை வரவிட்டுச்
சத்துருக்களைச் சிதறடியும்,
உமது அம்புகளை எய்து
அவர்களைக் கலங்கடியும்.

7. உயரத்திலிருந்து உமது கரத்தை
நீட்டி, ஜலப்பிரவாகத்துக்கு
என்னை விலக்கி இரட்சியும்.

8. மாயையைப் பேசும் வாயும்,
கள்ளத்தனமான வலதுகையும்
உடைய அந்நிய புத்திரரின்
கைக்கு என்னை விலக்கித்
தப்புவியும்.

9. **கர்த்தாவே,** நான் உமக்குப்
புதுப்பாட்டைப் பாடுவேன்;
தம்புரினாலும் பத்துநரம்பு
வீணையினாலும் உம்மைக்
கீர்த்தனம் பண்ணுவேன்.

10. நீரே ராஜாக்களுக்கு
ஜெயத்தைத் தந்து,
உமதடியானாகிய தாவீதைப்
பொல்லாத பட்டயத்திற்குத்
தப்புவிக்கிறவர்.

11. மாயையைப் பேசும் வாயும்,
கள்ளத்தனமான வலதுகையும்
உடைய அந்நிய புத்திரரின் கைக்கு
என்னை விலக்கித் தப்புவியும்.

12. அப்பொழுது எங்கள் குமாரர்
இளமையில் ஓங்கி வளருகிற
விருட்சக் கன்றுகளைப் போலவும்,
எங்கள் குமாரத்திகள் சித்திரந்
தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்
போலவும் இருப்பார்கள்.

13. எங்கள் களஞ்சியங்கள்
சகலவித வஸ்துக்களையும்
கொடுக்கத்தக்கதாய்
நிரம்பியிருக்கும்;
எங்கள் கிராமங்களில்
எங்கள் ஆடுகள் ஆயிரம்
பதினாயிரமாய்ப் பலுகும்.

14. எங்கள் எருதுகள்
பலத்தவைகளாயிருக்கும்; சத்துரு
உட்புகுதலும் குடியோடிப்
போகுதலும் இராது;
எங்கள் வீதிகளில் கூக்குரலும்
உண்டாகாது.

15. இவ்விதமான சீரைப்பெற்ற
ஜனம் பாக்கியமுள்ளது;
**கர்த்தரை** தெய்வமாகக்
கொண்டிருக்கிற ஜனம்
பாக்கியமுள்ளது.

**(தாவீது பாடின ஸ்தோத்திர சங்கீதம்)**

1. ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.



2. நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

3. **கர்த்தர்** பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமா யிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

4. தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.

5. உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன்.

6. ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

7. அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்.



8. **கர்த்தர்** இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

9. **கர்த்தர்** எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது.

10. **கர்த்தாவே,** உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.

11. மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு;

12. உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.



13. உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது.

14. **கர்த்தர்** விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.

15. எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர்.





16. நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.

17. **கர்த்தர்** தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.



18. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், **கர்த்தர்** சமீபமாயிருக்கிறார்.



19. அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

20. **கர்த்தர்** தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.

21. என் வாய் **கர்த்தரின்** துதியைச் சொல்வதாக; மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது.



**இந்த சங்கீதத்தை யூத வழிபாட்டு முறையில் யூத மக்கள் காலையில் 2 முறையும் மாலையில் 1 முறையும் மனப்பாடமாக சொல்லி ஆண்டவரை துதிப்பார்கள்.**

## சங்கீதம் 146

1. அல்லேலூயா, என் ஆத்துமாவே, **கர்த்தரைத்** துதி.

2. நான் உயிரோடிருக்குமட்டும் **கர்த்தரைத்** துதிப்பேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.



3. பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள்.

4. அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.



5. யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய **கர்த்தர்மேல்** நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.

6. அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்; அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்.

7. அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்; பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார்; கட்டுண்டவர்களைக் **கர்த்தர்** விடுதலையாக்குகிறார்.



8. குருடரின் கண்களைக்
**கர்த்தர்** திறக்கிறார்;
மடங்கடிக்கப்பட்டவர்களைக்
**கர்த்தர்** தூக்கிவிடுகிறார்;
நீதிமான்களைக் **கர்த்தர்**
சிநேகிக்கிறார்.

9. பரதேசிகளைக் **கர்த்தர்**
காப்பாற்றுகிறார்;
அவர் திக்கற்ற பிள்ளையையும்
விதவையையும் ஆதரிக்கிறார்;
துன்மார்க்கரின் வழியையோ
கவிழ்த்துப் போடுகிறார்.

10. **கர்த்தர்** சதாகாலங்களிலும்
அரசாளுகிறார்; சீயோனே,
உன் தேவன் தலைமுறை
தலைமுறையாகவும் ராஜரிகம்
பண்ணுகிறார். அல்லேலூயா.

| **சங்கீதங்கள்** | **எழுதியவர்** | **தலைப்பு** |
|---|---|---|
| 1 - 41 | தாவீது | (1) படைப்பு |
| பொருத்தமான புத்தகம்: | | **ஆதியாகமம்** |
| 42 - 72 | தாவீதும், கோராகும், | (2) மீட்பு |
| பொருத்தமான புத்தகம் : | | **யாத்திராகமம்** |
| 73 - 89 | ஆசாப் | (3) பரிசுத்தம் |
| பொருத்தமான புத்தகம்: | | **லேவியராகமம்** |
| 90 - 106 | மற்றவர்கள் | (4) அலைந்து திரிதல் |
| பொருத்தமான புத்தகம்: | | **எண்ணாகமம்** |
| 107 - 150 | தாவீதும், மற்றவர்களும் | (5) தேவனைப் போற்றுதல் |
| பொருத்தமான புத்தகம்: | | **உபாகமம்** |

## சங்கீதம் 147

1. **கர்த்தரைத்** துதியுங்கள்;
நம்முடைய தேவனைக்
கீர்த்தனம் பண்ணுகிறது
நல்லது, துதித்தலே இன்பமும்
ஏற்றதுமாயிருக்கிறது.

2. **கர்த்தர்** எருசலேமைக்
கட்டுகிறார்; துரத்துண்ட
இஸ்ரவேலரைக் கூட்டிச்
சேர்க்கிறார்.

3. இருதயம்
நொறுங்குண்டவர்களைக்
குணமாக்குகிறார்,
அவர்களுடைய
காயங்களைக் கட்டுகிறார்.

4. அவர் நட்சத்திரங்களின்
இலக்கத்தை எண்ணி,
அவைகளுக்கெல்லாம்
பேரிட்டு அழைக்கிறார்.



5. நம்முடைய ஆண்டவர்
பெரியவரும் மகா
பெலமுள்ளவருமாயிருக்கிறார்;
அவருடைய அறிவு
அளவில்லாதது.

6. **கர்த்தர்**
சாந்தகுணமுள்ளவர்களை
உயர்த்துகிறார்;
துன்மார்க்கரைத்
தரைமட்டும் தாழ்த்துகிறார்.

7. **கர்த்தரைத்** துதியுடன்
பாடிக் கொண்டாடுங்கள்;
நம்முடைய
தேவனைச்
சுரமண்டலத்தால்
கீர்த்தனம்
பண்ணுங்கள்.



8. அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்.

9. அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்.

10. அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார்.

11. தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் **கர்த்தர்** பிரியமாயிருக்கிறார்.

12. எருசலேமே, **கர்த்தரை** ஸ்தோத்திரி; சீயோனே, உன் தேவனைத் துதி.

13. அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.

14. அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்.

15. அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது.

16. பஞ்சைப்போல் உறைந்த மழையைத் தருகிறார்; சாம்பலைப் போல உறைந்த பனியைத் தூவுகிறார்.

17. அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார்; அவருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்?

18. அவர் தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப்பண்ணுகிறார்; தமது காற்றை வீசும்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும்.

19. யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும், தமது நியாயங்களையும் அறிவிக்கிறார்.




20. அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற் போகிறார்கள். அல்லேலூயா.

- இராஜரீக சங்கீதங்கள்
  2, 21, 45, 72, 110, 132
- பாவத்திற்காக மனம் வருந்தி ஜெபித்தல் 6, 32, 38, 51,102 ,130, 145
- சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்ட வேண்டுதல்
  35, 55, 58, 69, 101, 137
- சரித்திர சம்பந்தப்பட்ட சங்கீதங்கள்
  78, 81, 105, 106, 126.
- தேவனுடைய வார்த்தையின் மேன்மை 19, 119
- மேசியாவின் சங்கீதங்கள் ( ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது).
  2, 8, 16, 22, 40, 41, 45, 68, 69, 89, 102, 109, 110, 118.

1\. அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, **கர்த்தரைத்** துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்.

2\. அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.



3\. சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள்.

4\. வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள்; ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.

5\. அவைகள் **கர்த்தரின்** நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.

6\. அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்.

7\. பூமியிலுள்ளவைகளே, **கர்த்தரைத்** துதியுங்கள்; மகாமச்சங்களே, சகல ஆழங்களே,

**முக்கிய வசனங்கள்**
19:14; 29:2 145:21

8\. அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,



9\. மலைகளே, சகலமேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருக்களே,

10\. காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே,

11\. பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே,

12\. வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, **கர்த்தரை** துதியுங்கள்.



13\. அவர்கள் **கர்த்தரின்** நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.

14\. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

**ஆயத்தம்** : அமைதியாக அமர்ந்திருந்து மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு நிமிடமாவது ஜெப நிலையில் காத்திருங்கள்.

## சங்கீதம் 149

1. அல்லேலூயா, **கர்த்தருக்குப்** புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக.

2. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள்.

3. அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள்.



4. **கர்த்தர்** தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்; சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

5. பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள்.

6. ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும்,

7. அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும்,
எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும்,

8. அவர்கள் வாயில் **கர்த்தரை** உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.

9. இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.

## சங்கீதம் 150

1. அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்.

2. அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.



3. எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.



4. தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்;



5. ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.



6. சுவாசமுள்ள யாவும் **கர்த்தரைத்** துதிப்பதாக. அல்லேலூயா.

**சங்கீதங்கள் 107 -150**

**பாகம் 5. முடிவடைகிறது.**